Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 34/2020**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாபர்சாதிக் | ஜாதி | : | |
| த/பெ | : | கலிபா | தொழில் | : | உணவு பாதுகாப்பு அலுவலர், நத்தம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 45/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.11.2025.

(1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது நத்தம் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 31.08.2019 அன்று ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றிபோது மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் நியமன அலுவலர் கே.நடராஜன் அவர்களிடம் இருந்து கைபேசியின் வாயிலாக பெறப்பட்ட அறிவுறுத்தலின்படி கன்னிவாடி காவல்நிலையம் சென்றேன். அங்கு கன்னிவாடி காவல்நிலைய ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் மூலமாக கைப்பற்றப்பட்ட தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை கலந்த உணம் பொருட்களையும் எதிரி 1.எம்.இக்பால் த/பெ.முகமது ஹனிபா என்ற நபரையும், காவல் ஆய்வாளர் கன்னிவாடி காவல்நிலையம் திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் என்னிடம் ஒப்படைப்பு செய்தார். அதன் தனி அறிக்கை **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 03.09.2019 அன்று Cool lip filter tobacco என்ற உணவு பொருளை உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி வைப்பதற்காக 1வது எதிரியிடம் கூறினேன். அவர் சம்மதம் தெரிவித்தார். அப்போது சாட்சிகளாக திரு.கே.ஷாஜகான், மற்றும் திரு.எச்.முகமது இஸ்மாயில் ஆகியோர் உணவு மாதிரி எடுத்ததற்கு சாட்சியாக இருந்தார்கள். இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளாக திரு.முருகேசன் காவல ஆய்வாளர், திரு.சோர் சார்பு ஆய்வாளர், திரு.ராம்குமார் காவலர், திரு.கார்த்திக் காவார், திரு.பாலசுப்பிரமணி கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் வழக்கின் சாட்சிகளாக

இருந்தனர். பின்பு Cool lip filter tobacco என்ற உணவு பொருளை 1வது எதிரியிடம் விலைக்கு பெற்று ரொக்க ரசீது பெற்றுக்கொண்டேன். மேற்கண்ட ரொக்க ரசீது **(அ.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு Form VA இரண்டு பிரதிகள் தயார் செய்து ஒன்றை 1வது எதிரியிடம் சார்பு செய்தேன். அவர் பெற்றுக்கொண்டார். மேற்கண்ட Form -VA. **(அ.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரியிடம் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணைத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பங்கோரும் சட்டபடியான உரிமை எதிரிக்கு உள்ளது என்பதை தெரிவித்தேன். அவர் தனக்கு விருப்பம் இல்லை என கடிதம் கொடுத்தார். மேற்கண்ட கடிதம் **(அ.சா.ஆ.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு Cool lip filter tobacco என்ற உணவு பொருளை, உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 அதன் விதிகள்" 2011க்கிணங்க 4 பகுதிகளாக உணவு மாதிரிக்காக எடுத்து, அதன் ஒரு பகுதியை உணவு பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு கூடம் பாளையங்கோட்டை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு Form -VI தயார் செய்தேன். மேற்கண்ட Form -VI **(அ.சா.ஆ.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனுடன் முத்திரைப்பதித்த படிவம் ஒன்றை தயார் செய்தேன். மேற்கண்ட முத்திரைப்பதித்த படிவம் **(அ.சா.ஆ.6/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகும். பின்பு உணவு மாதிரியை கூரியர் சர்வீஸ் மூலமாக உணவு பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு கூடம் பாளையங்கோட்டை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான ரசீது **(அ.சா.ஆ.7/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் Form VI மற்றும் முத்திரை பதித்த படிவம் ஆகியவற்றை கூரியர் சர்வீஸ் மூலமாக உணவு பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு கூடம் பாளையங்கோட்டை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான ரசீது **(அ.சா.ஆ.8/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உணவு மாதிரி எடுத்த விபரத்தினை மாவட்ட நியமன அலுவர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, திண்டுக்கல் அவர்களுக்கு கடிதம் மூலமாக தெரிவித்தேன். அதனுடன் உணவு மாதிரி மற்ற 3 பகுதிகளை அவர் வசம் ஒப்படைப்பு செய்து, ஒப்புகை கடிதம் பெற்றுக்கொண்டேன். மேற்கண்ட கடிதம் மற்றும் ஒப்புகைக்கடிதம் **(அ.சா.ஆ.9/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு Cool lip filter tobacco என்ற The Director, Tejram, Dharampaul pvt ltd, Village

Nathupur, Sonepet District, Haryana Form-VA அனுப்பப்பட்டது. மேற்கண்ட Form VA **(அ.சா.ஆ.10/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான ரசீது **(அ.சா.ஆ.11/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட பதில் கடிதம் **(அ.சா.ஆ.12/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உணவு மாதிரியை பெற்றுக்கொண்ட உணவு பகுப்பாய்வாளர் பாளையங்கோட்டை அவர்கள் உணவு மாதிரியை பகுப்பாய்வு செய்து பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நிக்கோடின் என்ற பொருள் உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டத்திற்கு முரண்பாடாக கலந்திருப்பதால் பாதுகாப்பற்றது (Unsafe) மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது (Sale prohibited) என்ற ஆய்வறிக்கையை நியமன அலுவலர் திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அந்த ஆய்வறிக்கை மற்றும் கடிதம் **(அ.சா.ஆ.13/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆய்வறிக்கையை பெற்றுக்கொண்ட நியமான அலுவர் 1வது எதிரிக்கு மேல்முறையீடு செய்ய விருப்பம் இருந்தால் 30 தினங்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்ற ஆய்வறிக்கை மற்றும் கடிதத்தை எதிரி 1க்கு தபால் மூலம் அனுப்பி வைத்தார். அக்கடிதம் **(அ.சா.ஆ.14/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான ரசீது **(அ.சா.ஆ.15/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரிக்கு மேல்முறையீடு செய்ய விருப்பம் இருந்தால் 30 தினங்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்ற ஆய்வறிக்கை மற்றும் கடிதத்தை எதிரி 2க்கு தபால் மூலம் அனுப்பி வைத்தார். அக்கடிதம் **அ.சா.ஆ.16/PW.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான ரசீது **(அ.சா.ஆ.17/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரி மேல்முறையீடு செய்ய விருப்பம் இல்லை என எழுத்து பூர்வமாக கடிதம் கொடுத்துள்ளார். அக்கடிதம் **(அ.சா.ஆ.18/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரி மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. எனவே நியமன அலுவலர் திண்டுக்கல் அவர்கள் மேல்முறையீடு செய்யாத காரத்தினால் எதிரிகள் மீது குற்ற வழக்கு தொடுப்பதற்கு ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்துநிர்வாகத்துறை, சென்னை அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பினார். மேற்கண்ட பரிந்துரைக் கடிதம் **(அ.சா.ஆ.19/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்பரிந்துரை கடிதத்தை பெற்றுக்கொண்ட ஆணையர், சென்னை அவர்கள் எதிரிகள் மீது வழக்கு தொடுப்பதற்கு ஆணையினை நியமன அலுவலருக்கு அனுப்பி வைத்தார். மேற்படி

ஆணை **(அ.சா.ஆ.20/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகளின் பட்டியல் **(அ.சா.ஆ.21/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தமிழக அரசால் புகையிலை கலந்த உணவு பொருட்கள் தடை செய்யப்பட்ட ஆணை **(அ.சா.ஆ.22/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே, பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய திக்கோடின் என்ற பொருள் கலந்த பாதுகாப்பற்ற உணவு பொருளை அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்திருந்தது குற்றமாகும். மேலும், நியமன அலுவலர் அவர்கள் மூலமாக உணவு பாதுகாப்பு அலுவலராகிய நான் அந்த ஆணையினை பெற்றுக்கொண்டு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கையை மாண்புமிகு நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்துள்ளேன். இப்புகாரினை ஏற்று விசாரணை செய்து எதிரிகள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 இன் படி பாதுகாப்பற்றமைக்கு தப்புக்குறியீடு செய்யப்பட்டமைக்கு பிரிவு 52(1), பாதுகாப்பற்ற உணவு (Unsafe) என்பதற்கு பிரிவு 59(i) மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்ட (Sale Prohibited) பிரிவு 58 இன் கீழ் தண்டனை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor